குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.196/2017

2021-ம் ஆண்டு நவம்பர் 16 செவ்வாய்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 2-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. நல்லதம்பி | வயது : 43 |
| த/பெ : வெங்கடாசலம் | தொழில் : |
| ஊர் : | சமயம் : |
| வட்டம் : | ஜாதி : |
| மாவட்டம் : | |

முதல் விசாரணை .

நான் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாரைகிணறு என்ற ஊாில் குடியிருக்கிறேன். நான் எஸ்.என்.பி.பேருந்தில் ஓட்டுநராக வேலை செய்கிறேன். புகார்தாரர் குமார் என்னுடன் நடத்துனராக பணிபுரிகின்றார். 11.8.2014-ம் தேதி மாலை 4.45 மணிக்கு தருமபுரியில் இருந்து சேலம் நோக்கி வரும் பேருந்தில் நானும், குமாரும், எங்களுடன் உதவி நடத்துனர் லட்சுமணனும் பணியில் இருந்தோம். ஆஜர் எதிரிகளில் ஒருவரான நீலசட்டை அணிந்திருப்பவர்(குமார்) சாட்சிக்கு பெயர் தெரியவில்லை அடையாளம் காட்டப்பட்டது. அக்ரஉறாரம் செல்வதற்காக பயண சீட்டு கேட்டார் அதற்கு நடத்துனர் குமார் நேரம் இன்மையால் தீவட்டிப்பட்டியில் இறங்கி கொள்ளுமாறு அவரிடம் கூறினார். அவர் அதற்குள் யாருக்கே அலைபேசி மூலம் தகவல் கொடுத்திருந்தார். பேருந்து அக்ரஉறாரம் பேருந்து நிறுத்தத்திற்கு வந்த போது ஆஜர் எதிரிகள் பேருந்தை வழிமறித்ததால் நான் பேருந்தை ஓரமாக நிறுத்தினேன். அப்போது ஆஜர் எதிரிகளுக்கும், ,நடத்துனர் குமாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் நடத்துனரை அடித்தார்கள். அதில் யாரோ ஒருவர் காலணியால் அடித்தார். நடத்துனர் அங்கிருந்து புகார் கொடுப்பதற்காக சென்று விட்டார்.இது குறித்து போலீசார் என்னிடம் இதுவரை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

ஜனங்கள் நிறைய பேர் பேருந்தில் பயணம் செய்தார்கள் என்றால் அச்சமயத்தில் சுமார் 5 ,6 நபர்கள் மட்டுமே இருந்தார்கள். பஸ் எத்தனை நேரம் நின்றிருந்தது 1/2 மணி நேரம் நின்றிருந்தது. அச்சமயத்தில் அந்த பேருந்தை தவிர வேறு பேருந்து எதுவும் இல்லை. போலீசார் வந்த போது நான் சேலம் சென்று விட்டேன். சம்பவம் நடந்ததில் இருந்து தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் பணியில் இருந்தேன். ஆஜர் எதிரிகளில் ஒருவரான நீலசட்டை அணிந்திருப்பவர்(குமார்) மட்டும் எனக்கு தெரியும். ஊர் ஜனங்கள் மேற்படி பஸ் ஸ்டாப்பில் பஸ் நிறுத்துவதில்லை என்று ஏற்கனவே பிரச்சினை செய்து கொண்டிருந்தார்கள். ஊர்ஜனங்களை மேற்படி பிரச்சினை சம்மந்தமாக மிரட்டி வைக்கவேண்டும் என்பதற்காக பஸ் முதலாளிகள் பொய்யாக அ.சா.1னை பயன்படுத்தி இவ்வழக்கை கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பயிற்சி நடத்துனரும் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் என்னுடன் பணியில் இருந்தார்.
இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.

மறு விசாரணை. இல்லை.

ஓம்/- நல்லதம்பி

ஓம்/-M.A. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
ஓமலூர்.